மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆண்டு ஒன்றுக்கு 35,000 டயர்கள் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. தற்பொழுது, சென்னையிலும், நாகர்கோயிலும் 28,612 டயர்கள் புதுபிப்க்கப்படுகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், வெகுதூரம் போகும் பஸ்களிலே கூட ஸ்பேர் டயர் வைக்கப்படுவதில்லை என்பது உண்மையா? அதற்கான காரணம் என்ன? இபிமேலாவது ஸ்பேர் டயர்களை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பில்லாத காரணத்தால் பதில் சொல்ல இயலவில்லை.

திரு. எம். எஸ். மணி : தலைவரவர்களே, ஒரு புதிய டயர் எவ்வளவு மைல் ஓட வேண்டுமென்று கணக்கிடப்படுகிறதா? அவ்வாறு ஓட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : புதிய டயர் பற்றிய விவரம் இல்லை. ஆனால் புதுப்பித்த டயரை 12,000 மைல்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது.

ஆத்தூர்-காயல்பட்டினம் சாலை

* 425 வினா.—திரு. எம். அப்துல் கபூர் சாகிப் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுக்கா, ஆத்தூர் முக்காணி பாலத்திலிருந்து பெருஞ்சாலையை புன்னக்காயல் கிராமத்துக்கு விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், மேற்படி கிராமத்தில் இருந்து சுமார் ¾ (முக்கால்) மைல்தொலைவில் உள்ள காயல்பட்டினம் மேஜர் பஞ்சாயத்து பெருஞ்சாலையுடன் கடலோரமாக மேலும் விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முக்காணி பாலத்திற்கும் புன்னக்காயல் கிராமத்திற்கும் இடையே ஏற்கெனவே ஒரு சாலை உள்ளது.

(இ) இல்லை.

Irrigation Projects in Hosur taluk

* 426 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to take up the following irrigation project in Hosur taluk :

(1) Doddahalla Project near Anchetty;

(2) Byragondapally Project near Thally ; and

(3) Kodiyalam Project near Bagalur; and

(*b*) if so, when they will be taken up?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். இத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

THIRU K. S. KOTHANDARAMIAH : These small schemes have been kept pending for decades. I hear that plans and estimates have been submitted to the Government. May I know at what stage the schemes stand ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : So far as the Doddahalla Project near Anchetty is concerned, we have forwarded the pro-forma particulars to the Central Water and Power Commission. The preliminary comments of the Central Water and Power Commission have been replied to. Its technical clearance is awaited.

So far as the Byrakondapalli Project near Thally is concerned, a proposal was to form a tank across Chinnar river near Byrakondapalli village of Hosur taluk at a cost of Rs. 5.15 lakhs to benefit 205 acres was contemplated. This proposal involved acquisition of costly lands at an estimated value of Rs. 2.39 lakhs. Further the cost per ton worked out to Rs. 6,887 which is probibitively costly. Hence a proposal for construction of an anicut across Chinnar near Bairakondapalli village, instead of a tank scheme at an estimated cost of about Rs. 1,55,000 for benefiting a new area of 93 acres is under examination by the local officers.

So far as the Kodiyalam Project near Bagalur is concerned, a proposal for restoration of Kodiyalam Anicut in Kodiyalam village at an estimated cost of about Rs. 1,80,000 for benefiting a new area of 102 acres is under examination with the local officers.

'Ways and Means' advance to Corporation

* 427 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has been sanctioned a 'Ways and Means' advance of rupees 50 lakhs by the Government to help stablise its critical financial position; and

(*b*) whether a similar loan was granted on any previous occasion?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. விநாயகம் : சார், கார்ப்பொரேஷனுக்கு இதுமாதிரி 'வேஸ் அண்ட் மீன்ஸ்' அடிப்படையில் 50 இலட்சம் கடன் கொடுக்க வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது ? வருகின்ற வருவாய், அங்கிருக்கின்ற உத்தியோகஸ்தர்களுக்கு மாதம் தோறும் சம்பளம் கொடுப்பதற்குப் போதாது என்று கவலைப்பட்டு அந்தத் தொகையைக் கேட்டார்களா ? இப்படி ஒவ்வொரு ஆண்டும் சிக்கல் வரும் நேரத்தில் கொடுத்துக்கொண்டு வந்தால் நிதிநிலை எப்பொழுதுதான் சீர்ப்படும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, பல்வேறு வேலைகளுக்கு நிதி போதவில்லை என்பதும், அன்றாடச் செலவுகளுக்கு நிதி கூடவில்லை என்பதும் எடுத்துக் காட்டப்பட்டு இரண்டு கோடி ரூபாய்